## மாமன்றக் கூட்டம்

| | | |
|---|---|---|
| **கோப்பு எண்** | - | **ந.க.எண் 2244/2020/ எம்.சி. 8** |
| **நாள்** | - | **19.06.2020 காலை 11.00 மணி** |
| **தலைமை** | - | **திரு.ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,<br>ஆணையாளர் மற்றும் தனி அதிகாரி,<br>கோயம்புத்தூர் மாநகராட்சி** |
| **கலந்துகொண்டோர்** | - | **துணை ஆணையர்,<br>அனைத்து துறை தலைமைகள்,<br>அனைத்து மண்டல உதவி ஆணையர்கள்** |

---

## பொருள் எண் 1

பொருள்: பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – திரு. தி. ரா. ரவி, உதவி ஆணையாளர், தெற்கு மண்டலம் – 30.06.2020 அன்று ஓய்வு பெறுவது (பணி நீட்டிப்பு காலம்) – 01.07.2020 முதல் 30.06.2021 முடிய ஓராண்டு காலம் உதவி ஆணையாளர் பணியிடத்தில் பணி நீட்டிப்பு செய்ய அனுமதி வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை
1. அரசாணை எண். 682, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள். 23.11.2015
2. அரசாணை (ப) எண். 275 , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள். 29.06.2018
3. ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.329/2012018/எம்சி 2 நாள்.30.06.2018
4. அரசாணை (2ப) எண். 49, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.4) துறை, நாள். 28.06.2019
5. ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.3353/2019/எம்சி 2 நாள்.28.06.2019

---------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் உதவி ஆணையாளராக பணிபுரிந்து வரும் திரு. தி.ரா.ரவி அவர்கள் வயது முதிர்வின் காரணமாக 30.06.2018 அன்று பணி ஓய்வு பெற வேண்டியது ஆகும். இந்நிலையில் பார்வை 2 மற்றும் 4ல் காணும் அரசாணைகளின்படி, 01.07.2018 முதல் 30.06.2019 முடிய பணிநீட்டிப்பு செய்து பார்வை 3ல் காணும் செயல்முறை ஆணையுன்படியும் மற்றும் 01.07.2019 முதல் 30.06.2020 முடிய பணிநீட்டிப்பு செய்து பார்வை 5ல் காணும் செயல்முறை ஆணையின் மூலம் ஆணையிடப்பட்டது.

திரு. தி.ரா.ரவி அவர்கள் கடந்த 30.04.1984 அன்று இம்மாநகராட்சியில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்து அதன் பின்னர் உதவியாளர், கண்காணிப்பாளர், நிர்வாக அலுவலர் மற்றும் கணக்கு அலுவலர் ஆகிய பதவிகளில் திறம்பட பணியாற்றியுள்ளார். உதவி ஆணையாளர் பொறுப்பாக தெற்கு மண்டலத்தில் 10.01.2013 முதல் 23.07.2013 முடியவும், மத்திய மண்டலத்தில் 24.07.2013 முதல் 31.12.2014 முடியவும் மீண்டும் தெற்கு மண்டலத்தில் 01.01.2015 முதல் 22.11.2015 முடியவும் பணியாற்றி, பார்வை 1ல் காணும் அரசாணையின்படி உதவி ஆணையாளராக பதவி உயர்வு செய்யப்பட்டு கடந்த 23.11.2015 முற்பகல் முதல் இம்மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் பணியில் சேர்ந்து நாளது வரை பணிபுரிந்து வருகிறார்.

மேலும் தற்போது உதவி ஆணையாளர் பணியிடத்திலும் கடந்த 4 ஆண்டுகளுக்கும் மேலாக எவ்வித புகார்களும் இன்றி பணியாற்றி வருகிறார்.

இவர் மீது துறைச் சார்ந்த குற்றச்சாட்டுகள் மற்றும் ஊழல் மற்றும் கண்காணிப்பு பிரிவு தொடர்பான வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை.

திரு.தி.ரா. ரவி, உதவி ஆணையாளர் அவர்களின் பணிவிபரம் பின்வருமாறு :

- சொத்து வரி வசூலில் தெற்கு மண்டலத்தில் **2013–14**ல் 85%ம், மத்திய மண்டலத்தில் **2014–15**ல் **94**%ம், 2015–16ல் **89**%ம், **2016–17** ல் **89**%ம், **2017–18**ல் **90**%ம் , **2018–19**ல் **92**%ம் மற்றும் **2019–20**ல் **88**%ம் வரி வசூலில் திறம்பட செயலாற்றி வரிவசூல் செய்து மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டியமைக்காக பாராட்டுச் சான்றிதழ்கள் பெற்றுள்ளார்.
- தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வார்டு மறுவரை பணிகளில் இரவு, பகல் பாராமல் திறம்பட பணியாற்றி, இது தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபணை மனுக்களையும் முறையாக தீர்வு செய்து, எவ்வித குறைபாடுகளும் இன்றி இப்பணியினை சிறப்பாக முடித்துள்ளார்.
- கடந்த **20** ஆண்டுகளுக்கும் மேலாக இம்மாநகராட்சியில் வரவு செலவுத் திட்ட அறிக்கையினை தயார் செய்து, மாமன்றத்தில் சமர்ப்பிக்கும் பணியில் மிகவும் சிறப்பாக பணியாற்றியுள்ளார்.
- தெற்கு மண்டலத்தின் ஆண்டுக் கணக்குகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து மைய அலுவலகத்திற்கு சமர்ப்பித்து கணக்குகளை முடிக்க உறுதுணையாக இருந்துள்ளார்
- இம்மாநகராட்சி நிர்வாகப் பணிகளில் எவ்வித தொய்வும் இல்லாமல் மாநகராட்சிக்கு நற்பெயர் ஏற்படுத்தும் வண்ணம் திறம்பட செயல்பட்டு வருகிறார்.
- கோயம்புத்தூர் மாநகராட்சியில் உள்ள தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் வார்டு மறுவரை பணிகளில் இரவு, பகல் பாராமல் திறம்பட பணியாற்றியுள்ளார்.
- நிர்வாகப் பணி தொடர்பாக பொது மக்களிடம் சிறந்த முறையில் அணுகி அவர்களது குறைகளை கேட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார்.
- தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் பெறப்படும் அனைத்து மனுக்களின் மீதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களிடத்திலே மாநகராட்சிக்கு நற்பெயர் ஏற்பட காரணமாக இருந்து வருகிறார்.
- வரவு செலவு திட்ட அறிக்கை சமர்ப்பிக்க மாநகராட்சிக்கு மிகவும் உறுதுணையாக இருந்து வருகிறார்.
- ஆணையாளர் அவர்களால் தெரிவிக்கப்படும் விபரங்களை உடனுக்குடன் சரிசெய்து அதன் விபரத்தினை ஆணையாளர் அவர்களுக்கு சமர்ப்பித்து வருகிறார்.
- தெற்கு மண்டலத்திற்குட்ட **20** வார்டு பகுதிகளிலும் பொது சுகாதாரத்தை பேணிக்காப்பதில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார்.
- தெற்கு மண்டலம் தொடர்பாக ஆண்டுக்கணக்குகளை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் முடித்து மைய அலுவலகத்திற்கு சமர்ப்பித்து கணக்குகளை முடிக்க உறுதுணையாக இருந்து வருகிறார்.
- உதவி ஆணையாளராக தெற்கு மற்றும் மத்திய மண்டலத்தில் பணிபுரிந்த காலத்தில் சுமார் **2000**க்கும் மேற்ப்பட்ட தணிக்கைத் தடைப்பத்திகளுக்கு பதில் வழங்கி தடைகளை நிவர்த்தி செய்து தணிக்கைத் தடையினால் பணியாளர்களின் ஓய்வூதியம் பாதிக்கப்படாத வகையில் பெரும்பான்மையான பணியாளர்கள் ஓய்வூதியத்தினைஉரிய காலத்தில் பெறுவதற்கு உறுதுணையாக இருந்துள்ளார்.
- உதவி ஆணையாளராக தெற்கு மற்றும் மத்திய மண்டலத்தில் பணிபுரிந்த காலத்தில் வரி இல்லா இனங்கள் மீது தனி கவனம் செலுத்தி மாநகராட்சிக்கு இதன்மூலம் அதிக வருவாய் ஈட்ட உறுதுணையாக இருந்துள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் மெக்களிடமிருந்து பெறப்படும் சொத்துவரி, காலியிடவரி, புதிய குடிநீர் இணைப்பு, பாதாள சாக்கடை இணைப்பு மற்றும் பொது மக்களுக்குரிய சேவை தொடர்பான அனைத்து விண்ணப்பங்களின் மீதும் தனிக்கவனம் செலுத்தி உடனுக்குடன் நடவடிக்கை எடுத்து மாநகராட்சிக்கு பொது மக்களிடம் நற்பெயர் ஏற்பட காரணமாக இருந்துள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் அனுமதியின்றி கட்டப்படும் குடியிருப்பு மற்று வணிக கட்டிடங்களை கண்டறிந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்படும் வகையில் கட்டப்படும் கட்டிடங்களின் மீது தொடர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான ஆக்கிரமிப்பில் இருந்த பொது ஒதுக்கீட்டு இடங்களை கண்டறிந்து அவற்றை மாநகராட்சி வசம் பொறுப்பேற்று மாநகராட்சி சொத்துக்களை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் பாதுகாத்துள்ளார்.

- தற்போது தெற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் **650**க்கும் மேற்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்த பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி அதற்குரிய விண்ணப்பங்களை பெற்று வரன்முறைபடுத்தியதன் மூலம் மாநகராட்சிக்கு வருவாய் ஈட்டவும், பொது மக்களுக்கு அவர்களுக்குரிய மனையினை வரன்முறைப்படுத்தவும் உறுதுணையாக இருந்துள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் தீவிர கொசு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு டெங்கு காய்ச்சல் ஏற்படா வண்ணம் அனைத்து பகுதிகளிலும் மருத்துவ முகாம்கள் நடத்தி நில வேம்பு கசாயம் மற்றும் பப்பாளிச்சாறு வழங்கி பொதுமக்களின் சுகாதாரம் மேம்பட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் பருவ மழைக் காலங்களில் பொதுமக்களுக்கு எவ்வித அசம்பாவிதங்களும், இடையூறும் ஏற்படாமல் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் தமிழ்நாடு அரசின் முன்மாதிரி திட்டமான மழைநீர் சேகரிப்புத் திட்டத்தில் தீவிர ஈடுபாட்டுடன் செயல்பட்டு பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தவும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை அமைப்பதற்கும் அரசிற்கும் மாநகராட்சிக்கும் உறுதுணையாக இருந்துள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் மாண்புமிகு முதலமைச்சரின் தனிப்பிரிவிலிருந்து பெறப்படும் பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள், மாவட்ட ஆட்சியரிடமிருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்கள், மாண்புமிகு மேயர் மற்றும் ஆணையாளரிடமிருந்து பெறப்படும் குறைதீர்க்கும் மனுக்களின் மீது தனிக் கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு பொதுமக்களின் குறைகளை உடனுக்குடன் களையும் வகையில் சிறப்பாக செயல்பட்டுள்ளார்.
- உதவி ஆணையாளராக பணிபுரிந்த காலத்தில் பொதுமக்களுக்கு தேவையான சாலைகள், பாதாள சாக்கடை, தெருவிளக்குகள், பொதுக் கழிப்பிடங்கள் மற்றும் குடிநீர் வசதிகள் உள்ளிட்ட அனைத்து அடிப்படை வசதிகளையும் விரைவாக மேற்கொள்ள சிறப்பாக செயல்பட்டுள்ளார்.
- இம்மாநகராட்சியின் அனைத்து நிர்வாகப் பணிகளிலும் ஆணையாளர் மற்றும் உயர் அலுவலர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி மாநகராட்சிக்கு எந்தவிதமான அவப்பெயரும் ஏற்படா வண்ணம் செயல்பட்டுள்ளார்.
- தற்பொழுது COVID 19 (கொரானா) வைரஸ் தொற்று பரவலாக கோயம்புத்தூரிலும் உள்ள நிலையில் அதனை கட்டுபடுத்தும் வகையில் மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்கும், இவ்வைரஸ் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உறுதுணையாகவும் இருந்து திறம்பட பணியாற்றி வருகிறார். மேலும் வீதி வீதியாக ஒவ்வொரு வீட்டிற்கும் கிருமிநாசினி தெளித்தும் , ஏழை, எளிய மக்களுக்கு தொற்று பரவாமல் இருக்க மாஸ்க் வழங்கியும், உணவு பொருட்கள் வழங்கியும் மற்றும் கொரானா சம்பந்தமான புகார் வரப்பெற்றதும் உடனடியாக அந்த இடத்திற்கு விரைந்து சென்று நடவடிக்கை எடுத்தும் திறம்பட செயலாற்றி வருகிறார்.

இம்மாநகராட்சியில் **35** ஆண்டுகள் இவரது சிறப்பான பணி அனுபவத்தினை கருத்தில் கொண்டும், மேற்குறிப்பிட்ட பணிகளில் இவரது அர்ப்பணிப்பு மற்றும் ஈடுபாடு ஆகியவற்றின் அடிப்படையிலும், தெற்கு மண்டலத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சி பணிகளில் முழு ஈடுபாட்டுடன் இவர் செயல்பட்டு வருவதாலும் இம்மாநகராட்சிக்கு இவரது பணி அவசியம் தேவைப்படுவதாலும் சிறப்பினமாக கருதி இவருக்கு **01.07.2020** முதல் **30.06.2021** முடிய ஓராண்டு காலத்திற்கு உதவி ஆணையாளர் பணியிடத்தில் பணி நீட்டிப்பு வழங்க அரசிற்கு செயற்குறிப்பு அனுப்பி வைக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம். ந.க.எண்.**1929** /**2020**/எம்சி**2**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 287 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண்கள். 11– க்கு கடையின் உரிமைதாரர் உரிம பெயர் மாற்றம் செய்ய அனுமதி கோருவது தொடர்பாக.

பார்வை:
1. அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007.
2. M. ராஜம்மாள், கடை எண். 11 அவர்களது விண்ணப்ப நாள். 11.10.2019.
3. ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவு நாள். 14.01.2020 .

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட, பார்வை 1ல் காணும் அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007 –ன் படி, காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எணகள்.11- க்கு கடையின் உரிமம் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

M. ராஜம்மாள், தங்களது 11.10.2019 ஆம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 11-ஐ K.பால சுப்பிரமணியன் 2004-ம் வருடம் மாநகராட்சி மூலம் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திருமதி. M. ராஜம்மாள் என்பவருடன் K.பாலசுப்பிரமணியன் சேர்ந்து கூட்டு வியாபாரத்தின் அடிப்படையில் 2010 முதல் வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், 2016 –ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்திலிருந்து விலகியதற்கான ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டு கொடுத்துள்ளார். அது முதல் மேற்படி கடையில் தான் மட்டுமே வியாபாரம் செய்து வருவதாகவும், மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை நிலுவையின்றி செலுத்தி வருகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், கடையின் உரிமம் பெயர் மாற்றக் கட்டணத்திற்குண்டான தொகைகளையும் கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

கடை எண் 11 -க்கு செலுத்தியுள்ள டெபாசிட் தொகைகள்

| தலைப்பு | இரசீது எண். | நாள். | தொகை |
|---|---|---|---|
| 12 மாத வாடகைத் தொகை<br>(மாத வாடகை=5313) | 201910211630<br>201911191451 | 21.10.19<br>19.11.19 | 63,756/-<br>9,564/- |
| 12 மாதத்திற்கு சமமான பெயர் மாற்ற கட்டணம் | 201910211631<br>201911191451 | 21.10.19<br>19.11.19 | 63,756/-<br>9,564/- |
| விண்ணப்ப கட்டணம் | 201910211634 | 21.10.19 | 2,500/- |

மேலும், கடை எண். 11 -க்கு அக்டோபர் 2019 வரை வாடகைத் தொகையை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர். K.பாலசுப்பிரமணியன் அவர்கள் பெயரிலிருந்து M. ராஜம்மாள் பெயரில் கடையின் உரிமம் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.50/- மதிப்புள்ள பிரமான பத்திரமும வழங்கியுள்ளார். எனவே, திரு. K.பாலசுப்பிரமணியன் பெயரிலிருந்து M. ராஜம்மாள் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, அரசாணை எண்.92 நாள் 03.07.2007 ன் படி, காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 11 -ஐ திரு. K.பாலசுப்பிரமணியன் பெயரிலிருந்து M.ராஜம்மாள் பெயருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5958 /2019/அ1 (மே)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 288 நாள் 19.06.2020</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண்.12 – க்கு கடையின் உரிமைதாரர் உரிம பெயர் மாற்றம் செய்ய அனுமதி கோருவது தொடர்பாக.

பார்வை:

1. அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007.
2. P. மருதப்பன், கடை எண். 12 அவர்களது விண்ணப்ப நாள். 11.10.2019.
3. ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவு நாள். 14.01.2020

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட, பார்வை 1ல் காணும் அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007 –ன் படி, காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண்.12- க்கு கடையின் உரிமம் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

P. மருதப்பன், தங்களது 11.10.2019 ஆம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 12-ஐ S.சுப்பிரமணி 2004-ம் வருடம் மாநகராட்சி மூலம் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திரு.P.மருதப்பன் என்பவருடன் S.சுப்பிரமணி சேர்ந்து கூட்டு வியாபாரத்தின் அடிப்படையில் 2004 முதல் வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், 2009 –ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்திலிருந்து விலகியதற்கான ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டு கொடுத்துள்ளார். அது முதல் மேற்படி கடையில் தான் மட்டுமே வியாபாரம் செய்து வருவதாகவும், மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை நிலுவையின்றி செலுத்தி வருகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், கடையின் உரிமம் பெயர் மாற்றக் கட்டணத்திற்குண்டான தொகைகளையும் கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

கடை எண் 12 -க்கு செலுத்தியுள்ள டெபாசிட் தொகைகள்

| தலைப்பு | இரசீது எண். | நாள். | தொகை |
|---|---|---|---|
| 12 மாத வாடகைத் தொகை<br>(மாத வாடகை=5313) | 201910211567<br>201911191474 | 21.10.19<br>19.11.19 | 63,756/-<br>9,564/- |
| 12 மாதத்திற்கு சமமான பெயர் மாற்ற கட்டணம் | 201910211587<br>201911191474 | 21.10.19<br>19.11.19 | 63,756/-<br>9,564/- |
| விண்ணப்ப கட்டணம் | 201910211598 | 21.10.19 | 2,500/- |

மேலும், கடை எண். 12 -க்கு அக்டோபர் 2019 வரை வாடகைத் தொகையை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர். S.சுப்பிரமணி அவர்கள் பெயரிலிருந்து P. மருதப்பன் பெயரில் கடையின் உரிமம் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.50/- மதிப்புள்ள பிரமான பத்திரமும் வழங்கியுள்ளார். எனவே, திரு. S.சுப்பிரமணி பெயரிலிருந்து P. மருதப்பன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, அரசாணை எண்.92 நாள் 03.07.2007 ன் படி, காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 12 -ஐ திரு. S.சுப்பிரமணி பெயரிலிருந்து P. மருதப்பன் பெயருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5958 /2019/அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 289 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 13 – க்கு கடையின் உரிமைதாரா் உரிம பெயா் மாற்றம் செய்ய அனுமதி கோருவது தொடா்பாக.

பாா்வை:
1. அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007.
2. P. மருதப்பன், கடை எண். 13 அவா்களது விண்ணப்ப நாள். 11.10.2019.
3. ஆணையாளா் மற்றும் தனிஅதிகாாி அவா்களின் உத்தரவு நாள். 14.01.2020

-----

கோயம்புத்தூா் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட, பாா்வை 1ல் காணும் அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007 –ன் படி, காந்திபாா்க் (புதிய கடைகள்) கடை எண்.13 க்கு கடையின் உரிமம் பெயா் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளாா்.

P. மருதப்பன், தங்களது 11.10.2019 ஆம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காந்திபாா்க் (புதிய கடைகள்) கடை எண். 13-ஐ டி.செல்லதுரை 2007-ம் வருடம் மாநகராட்சி மூலம் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திரு. P.மருதப்பன் என்பவருடன் டி.செல்லதுரை சோ்ந்து கூட்டு வியாபாரத்தின் அடிப்படையில் 2008 முதல் வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், 2009 –ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்திலிருந்து விலகியதற்கான ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டு கொடுத்துள்ளாா். அது முதல் மேற்படி கடையில் தான் மட்டுமே வியாபாரம் செய்து வருவதாகவும், மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை நிலுவையின்றி செலுத்தி வருகின்றேன் என்றும் தொிவித்துள்ளாா். மேலும், கடையின் உரிமம் பெயா் மாற்றக் கட்டணத்திற்குண்டான தொகைகளையும் கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளாா்.

கடை எண் 13 -க்கு செலுத்தியுள்ள டெபாசிட் தொகைகள்

| தலைப்பு | இரசீது எண். | நாள். | தொகை |
|---|---|---|---|
| 12 மாத வாடகைத் தொகை | 201910211672 | 21.10.19 | 61,896/- |
| (மாத வாடகை=5158) | 201911191559 | 19.11.19 | 9,288/- |
| 12 மாதத்திற்கு சமமான பெயா் மாற்ற கட்டணம் | 201910211676 | 21.10.19 | 61,896/- |
| | 201911191559 | 19.11.19 | 9,288/- |
| விண்ணப்ப கட்டணம் | 201910211681 | 21.10.19 | 2,500/- |

மேலும், கடை எண். 13 -க்கு அக்டோபா் 2019 வரை வாடகைத் தொகையை நிலுவையின்றி செலுத்தியுள்ளனா். டி.செல்லதுரை அவா்கள் பெயாிலிருந்து P.மருதப்பன் பெயாில் கடையின் உாிமம் பெயா் மாற்றம் செய்வதற்கு ரூ.50/- மதிப்புள்ள பிரமான பத்திரமும் வழங்கியுள்ளாா். எனவே, திரு.டி.செல்லதுரை பெயாிலிருந்து P. மருதப்பன் பெயருக்கு பெயா் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, அரசாணை எண்.92 நாள் 03.07.2007 ன் படி, காந்திபாா்க் (புதிய கடைகள்) கடை எண். 13 -ஐ திரு. டி.செல்லதுரை பெயாிலிருந்து P. மருதப்பன் பெயருக்கு உாிமம் பெயா் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5958 /2019/அ1 (மே)

**மாநகர மன்ற தீா்மானம் எண் 290 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

-----------------------------------------------------------------------------------------------------------

## பொருள் எண் 5

பொருள்: கோயம்புத்தூர் மாநகராட்சி – மேற்கு மண்டலம் - வணிக வளாக கடைகள் - காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 16 – க்கு கடையின் உரிமைதாரர் உரிம பெயர் மாற்றம் செய்ய அனுமதி கோருவது தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண்.92 நாள்.03.07.2007.
2. P. மருதப்பன், கடை எண். 16 அவர்களது விண்ணப்ப நாள். 11.10.2019.
3. ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி அவர்களின் உத்தரவு நாள். 14.01.2020

-----

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட, பார்வை 1ல் காணும் அரசானை நிலை எண்.92 நாள்.03.07.2007 –ன் படி, காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண்.16 -க்கு கடையின் உரிமம் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார்.

P. மருதப்பன், தங்களது 11.10.2019 ஆம் தேதிய விண்ணப்பத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 16-ஐ S.கண்ணன் 1992-ம் வருடம் மாநகராட்சி மூலம் கடை ஒதுக்கீடு செய்யப்பட்டது என்றும் இக்கடையில் திரு. P.மருதப்பன் என்பவருடன் S.கண்ணன் சேர்ந்து கூட்டு வியாபாரத்தின் அடிப்படையில் 2005 முதல் வியாபாரம் செய்து வந்துள்ளதாகவும், 2006 –ம் வருடம் கூட்டு வியாபார ஒப்பந்தத்திலிருந்து விலகியதற்கான ஒப்பந்த பத்திரத்தில் கையொப்பமிட்டு கொடுத்துள்ளார். அது முதல் மேற்படி கடையில் தான் மட்டுமே வியாபாரம் செய்து வருவதாகவும், மேற்படி கடைக்கான மாதாந்திர வாடகையை நிலுவையின்றி செலுத்தி வருகின்றேன் என்றும் தெரிவித்துள்ளார். மேலும், கடையின் உரிமம் பெயர் மாற்றக் கட்டணத்திற்குண்டான தொகைகளையும் கீழ்கண்டவாறு செலுத்தியுள்ளார்.

கடை எண் 16 -க்கு செலுத்தியுள்ள டெபாசிட் தொகைகள்

| தலைப்பு | இரசீது எண். | நாள். | தொகை |
|---|---|---|---|
| 12 மாத வாடகைத் தொகை<br>(மாத வாடகை=5153) | 201910211754<br>201911191604 | 21.10.19<br>19.11.19 | 63,756/-<br>9,564/- |
| 12 மாதத்திற்கு சமமான பெயர் மாற்ற கட்டணம் | 201910211759<br>201911191604 | 21.10.19<br>19.11.19 | 63,756/-<br>9,564/- |
| விண்ணப்ப கட்டணம் | 201910211763 | 21.10.19 | 2,500/- |

மேலும், கடை எண். 16 -க்கு அக்டோபர் 2019 வரை வாடகைத் தொகையை நிலுவையின்றி செலுத்தியுள்ளனர். S.கண்ணன் அவர்கள் பெயரிலிருந்து P. மருதப்பன் பெயரில் கடையின் உரிமம் பெயர் மாற்றம் செய்வதற்கு ரூ.50/- மதிப்புள்ள பிரமான பத்திரமும் வழங்கியுள்ளார். எனவே, திரு. S.கண்ணன் பெயரிலிருந்து P. மருதப்பன் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய அனுமதி வேண்டப்படுகிறது.

எனவே, அரசாணை எண்.92 நாள் 03.07.2007 ன் படி, காந்திபார்க் (புதிய கடைகள்) கடை எண். 16 -ஐ திரு. S.கண்ணன் பெயரிலிருந்து P. மருதப்பன் பெயருக்கு உரிமம் பெயர் மாற்றம் செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 5958 /2019/அ1 (மே)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 291 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 6**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் டாடாபாத் பிரிவு வார்டு எண் 45 ல் சங்கனூர் மயானத்தில் எரிவாயு தகனம் கட்டிடத்திற்கு கூடுதல் கட்டிடம் கட்டுதல் பணிக்கு மதிப்பீடு ரூ. 79,90,000/- க்கு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணிக்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 2510/2020/ எம்.டி. 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 292 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 7**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 82 கோட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 37,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 2614/2020/ எம்.டி. 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 293 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 8**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண் 80 ம.ந.க. வீதி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் செய்தல் பணிக்கு மதிப்பீடு ரூ. 54,00,000/- க்கு நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 2613/2020/ எம்.டி. 5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 294 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 9**

கோவை மாநகராட்சி மத்திய மண்டலம் வார்டு எண்–72 க்குட்பட்ட வ.உ.சி பூங்கா அருகில் உள்ள சறுக்கு விளையாட்டு திடலுக்கு சின்தடி பூச்சு பூசுதல், கழிப்பிடம் கட்டுதல் மற்றும் தங்கும் இடம் அமைத்து மற்றும் வேலி அமைத்தல் பணி மிகவும் அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்கள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவில் மிகச்சிறந்த இடத்தில் உள்ளர் இங்கு மாநில அளவில் போட்டிகள் நடத்தப்பட்டும் நடைபெறவும் உள்ளன.

எனவே, மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.23.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 2663/2020/ எம்.டி.5

**மாநகர மன்ற தீர்மானம் எண் 295 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் -கோவைமாநகராட்சி-தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் மேற்கொள்வது–மதிப்பீட்டுத்தொகையான ரூ.75,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டுவது தொடர்பாக.

கோயம்புத்தூர் மாநகராட்சிக்குட்பட்ட 5 மண்டலங்களுக்குட்பட்ட 100 வார்டுகளில் அழுத்தம் குறைவுள்ள பகுதி, குடிசைபகுதி, மேடானபகுதி தவிர பராமரிப்பு பணிகளான குடிநீர் கசிவு சரிசெய்தல், நெடுஞ்சாலைத் துறைசாலைகள் அகலப்படுத்துதல் பணிகளின் போது சேதமடையும் பிரதான குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல், கோடை காலத்தில் மின்தடை நேரங்களில் ஏற்படும் குடிநீர் விநியோகதடை காலங்களில் மற்றும் குடிநீர் சம்பந்தமான அன்றாடம் பெறப்படும் புகார்களுக்கு ஏற்றவாறு டேங்கர் லாரிகள் மூலம் 1)பாரதி பூங்கா 2)புலியகுளம் 3)வரதராஜபுரம் 4)கணபதி MSR மற்றும் 5)சாரதாமில் (சுந்தராபுரம்) மேல்நிலைத் தொட்டிகளிலிருந்து, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கும் சேர்த்து மாநகராட்சி டேங்கர் லாரிகள் 7 எண்ணிக்கை தவிர தேவைக்கேற்ப தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

தற்சமயம் தனியார் டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் விநியோகிக்கப்பட்டு மதிப்பீட்டு ஒப்பந்ததொகை முடிவடையவுள்ளதால் மதிப்பீடு ரூ.75,00,000/-க்கு நிர்வாக அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 3778/2020/ எம்.டி. 2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 296 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளால் சேதம் அடைந்த சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2020-21) -ன் கீழ் **ரூ.3001.70** இலட்சத்திற்கு கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளது.

| வடக்கு மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| **வரிசை எண்** | **சிப்பம் எண்** | **பணியின் பெயர்** | **நீளம் (கி.மீ)** | **மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்)** |
| 1 | சிப்பம் **1** | வார்டு எண்.**38,41,44,46,47** மற்றும் **55**-க்குட்பட்ட வ.உ.சி காலனி, அருணாசலகவுண்டர் லே அவுட், காந்தி மாநகர் பிரதான சாலை, விஜய் மெஸ் சாலை, இலை கடை சாலை, கோவில் குறுக்கு சாலை, மேற்கு குறுக்கு சாலை, கிழக்கு குறுக்கு சாலை, குறுக்கு சாலை, முத்து கார்டன் சாலை, முத்து கார்டன் குறுக்கு சாலை, அமிர்தா ஸ்கூல் சாலை, ரயில்வே மென்ஸ் காலனி, நேதாஜி நகர், கருப்பராயன் கோவில் வீதி, குறுக்கு சாலை, ஜெய் நகர் சாலை, ஜெயபிரகாஷ் நகர் பிரதான சாலை, தாரணி நகர் சாலை, பெருமாள் கோவில் வீதி மற்றும் பொன்னி நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 6.53 | 500.00 |
| **மொத்தம்** | | | 6.53 | 500.00 |

| கிழக்கு மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 2 | சிப்பம் 2 | வார்டு எண் 37 -க்குட்பட்ட தண்ணீர் பந்தல் சாலையில் மகேஸ்வரி நகர் முதல் இந்து நகர் வரை மற்றும் வார்டு எண் 32 -க்குட்பட்ட விளாங்குறிச்சியில் பிரதான சாலை இந்து நகர் முதல் பாலம் வரை மற்றும் சேரன் மாநகர் 2,3,4,7 வது பேருந்து நிறுத்தம் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல். | 6.43 | 500.00 |
| **மொத்தம்** | | | **6.43** | **500.00** |

| மேற்கு மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 3 | சிப்பம் 3 | வார்டு எண் 6,15 மற்றும் 18-க்குட்பட்ட ஜெயலட்சுமி நகர், ஷாஜ் கார்டன், காமராஜ் நகர், பாலாஜி நகர், ராஜலட்சுமி நகர் குறுக்கு சாலை, நடராஜ் நகர் குறுக்கு சாலைகள், ஸ்ரீனிவாசன் நகர் குறுக்கு சாலைகள், இட்டேரி சாலை, கொங்கு நகர், லஷ்மி நகர், எல்லப்ப நாய்கர் தோட்டம், சம்பத் நகர், ராதிகா அவென்யூ விரிவாக்கம், இளங்கோவடிகள் வீதி, ராஜேந்திரா பிரசாத் II வது வீதி, முல்லை நகர், ஸ்ரீ நகர், புதுகிணறு வீதி, லிங்கனூர் அண்ணா நகர், Afl ஸ்ரீ பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 9.02 | 500.00 |
| **மொத்தம்** | | | **9.02** | **500.00** |

| தெற்கு மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 4 | சிப்பம் 4 | வார்டு எண். 86 க்குட்பட்ட அல்-அமீன் காலனி, ரோஸ் கார்டன், பிலால் நகர், வார்டு எண் 87 -க்குட்பட்ட பாரதி நகர் மற்றும் கே.பி.பி. நகர், வார்டு எண் 88 -க்குப்பட்ட ஜே.ஜே நகர் பிரதான சாலை, திரு நகர் காலனி, போயர் வீதி, சொர்ணம்பிகா கார்டன், வார்டு எண் 92 க்குட்பட்ட பி.கே புதூர் இந்திரா நகர், சாரதா நகர். ஈ.பி காலனி மற்றும் வார்டு எண் 93-க்குட்பட்ட மதுரை வீரன் கோவில் பிரதான சாலை, பார்க் டவுன் மற்றும் லஷ்மி நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 12.76 | 500.00 |
| 5 | சிப்பம் 5 | வார்டு எண். 89 க்குட்பட்ட தியாகராஜ நகர், ரூபா நகர், நேரு நகர், கிருஷ்ணா நகர், கே.கே.நகர், எம்.எம். கார்டன், வார்டு எண் 90 க்குட்பட்ட 100 அடி சாலை விரிவாக்கம், ஐஸ்வர்யா நகர், ரங்கசாமி நகர், திருப்பதி நகர், பெருமாள் நகர், ஜாமியா நகர், பாரூக் நகர் மற்றும் அலமு நகர் சாலை மற்றும் வார்டு எண் 91 க்குப்பட்ட லாவண்யா கார்டன் மற்றும் சரவணா நகர் ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 10.00 | 501.70 |
| **மொத்தம்** | | | **22.76** | **1001.70** |

| மத்தியம் மண்டலம் | | | | |
|---|---|---|---|---|
| வரிசை எண் | சிப்பம் எண் | பணியின் பெயர் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 6 | சிப்பம் 6 | வார்டு எண். 25 க்குட்பட்ட வி.வி.சி சாலை, வார்டு எண் 45 க்குட்பட்ட காமராஜபுரம், லெனின் நகர் மற்றும் ஆர்.ஜி நகர், வார்டு எண் 51 க்குட்பட்ட காந்திபுரம் 7வது வீதி, காந்திபுரம் 9 வது வீதி விரிவாக்கம் மற்றும் டாடாபாத் 11 வது வீதி முதல் கொங்குநாடு மருத்துவமனை வரை, வார்டு எண் 52 க்குட்பட்ட காந்திபுரம் குறுக்கு சாலை 1 முதல் 4 வது வீதி, திருமலை சாமி வீதி, என்.வி.என் வீதி, திருவள்ளுவர் வீதி, வார்டு எண் 53 க்குட்பட்ட வெங்கிடசாமி சாலை, அலமு நகர் பிரதான சாலை, அலமு நகர் குறுக்கு சாலை, மாந்திரியப்பன் வீதி, எஸ்.என்.ஆர் வீதி பிரதான சாலை, தனலட்சுமி நகர் விரிவாக்கம், நேதாஜி சாலை குறுக்கு மற்றும் ஜி.கே.எஸ் நகர், வார்டு எண் 54 க்குட்பட்ட சத்யமூர்த்தி சாலை குறுக்கு, காளப்பன் லே அவுட், சரோஜினி சாலை, வெங்கிடசாமி லே அவுட், தேசபந்து வீதி, பட்டேல் சாலை குறுக்கு, வார்டு எண் 68 க்குட்பட்ட 80 அடி சாலை, வார்டு எண் 72 க்குட்பட்ட காளீஸ்வரா மில் சாலை, ஆர்.ஆர் சாமி லே அவுட், ஆர்.ஆர் சாமி சந்து, சோமசுந்தரா மில் சாலை மற்றும் வார்டு எண் 83 க்குட்பட்ட தாமஸ் வீதி ஆகிய பகுதிகளில் தார்சாலை புதுப்பித்தல் | 8.395 | 500.00 |
| | | **மொத்தம்** | **8.395** | **500.00** |

மேற்கண்ட பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகளை சீரமைப்பு செய்வதற்காக தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) (2020-21) -ன் கீழ் மதிப்பீடு ரூ.3001.70 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில்நுட்ப அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு கருத்துரு அனுப்பி வைப்பதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.2465 /2020/எம்டி3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 297 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

கோயம்புத்தூர் மாநகராட்சி – வடக்கு மண்டலம் - வார்டு எண் 28, 29, 30 மற்றும் 31 -க்குட்பட்ட பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்தல் பணிக்கு ஆட்களை ஒரு வருட காலத்திற்கு நியமித்தல் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோர நிர்வாக அனுமதி வேண்டி வரைவு பொருள் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 3703/2020/எம்.டி.2 | வார்டு எண் 28 – உட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்தல் பணிக்கு ஆட்களை ஒரு வருட காலத்திற்கு நியமித்தல். | 9,10,000/- |
| 2 | 3706/2020/எம்.டி.2 | வார்டு எண் 29 உட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்தல் பணிக்கு ஆட்களை ஒரு வருட காலத்திற்கு நியமித்தல் . | 9,10,000/- |

| | | | |
|---|---|---|---|
| 3 | 3705/2020/எம்.டி.2 | வார்டு எண் 30 உட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்தல் பணிக்கு ஆட்களை ஒரு வருட காலத்திற்கு நியமித்தல் . | 9,10,000/- |
| 4 | 3704/2020/எம்.டி.2 | வார்டு எண் 31 உட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் ஏற்றம் செய்தல் மற்றும் பகிர்மான குழாய் மூலம் விநியோகம் செய்தல் பணிக்கு ஆட்களை ஒரு வருட காலத்திற்கு நியமித்தல் . | 9,10,000/- |

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண்.3703 /2020/எம்டி2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 298 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல வார்டுக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 44 க்குட்பட்ட சபரி கார்டன், நல்லாம்பாளையம் சாலை, அன்னையப்பர் வீதி, சங்கனூர் இரயில்வே கேட், ரங்கா லே அவுட், லட்சுமணன் வீதி, ஜெய் நகர், ராசியப்பன் வீதி மற்றும் கருப்புசாமி நகர் ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் தூர்வாருதல் மற்றும் பழுதடைந்த பகுதகளில் மழைநீர் வடிகால் புதுப்பித்தல். ந.க.எண்.141/2020/எம்.டி.2 | 25.00 | ம.தீஎண் 65 நாள். 06.01.20 | 05.03.20 முதலாம் அழைப்பு | 1).திரு.கே.சுந்தரம் 0.17% குறைவு<br><br>2).திரு.எஸ்.சிவராஜ் (மதிப்பீட்டுத் தொகை) | திரு.கே.சுந்தரம் 0.17% குறைவு |
| 2. | வார்டு எண் 41 க்குட்பட்ட விளாங்குறிச்சி பிரதான சாலை தெற்கு பகுதியில் புதிய எம்.எஸ்.ஆர் டேங்க் முதல் கோவில் வரை மழைநீர் வடிகால் அமைத்தல். ந.க.எண்.129/2020/எம்.டி.2 | 75.00 | ம.தீஎண் 66 நாள். 06.01.20 | 05.03.20 முதலாம் அழைப்பு | 1).திரு.ஆர். செல்வராஜ் 0.34 % குறைவு<br><br>2).திரு.ஆர். தங்கவேல் 0.07% குறைவு | திரு.ஆர். செல்வராஜ் 0.34 % குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தனித்தனியாக பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்.141/2020/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 299 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல வார்டுக்குட்பட்ட பகுதியில் அபிவிருத்திப் பணிகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1, | வார்டு எண் 41 க்குட்பட்ட கணபதி மாநகர் 2 வது பிரிவு பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல்.<br>ந.க.எண்.130/2020/எம்.டி.2 | 75.00 | ம.தீஎண் 66 நாள். 06.01.20 | 10.03.20 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.கே.எஸ்.ஆர் அன் கோ 0.18% குறைவு<br><br>2).தி/ள்.என்.எஸ்.பி அசோசியேட்ஸ் 0.38% குறைவு | தி/ள்.என்.எஸ்.பி அசோசியேட்ஸ் 0.38% குறைவு |
| 2. | வார்டு எண் 40 க்குட்பட்ட வி.என்.எஸ் நகர், வி.ஜி.ராவ் நகர் பேஸ் II பகுதி முதல் சோபா நகர் பாலம் கிராசிங் முதல் எம்.ஜி சாலை சந்திப்பு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் தூர்வாருதல்.<br>ந.க.எண்.140 /2020/எம்.டி.2 | 20.00 | ம.தீஎண் 65 நாள். 06.01.20 | 10.03.20 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.பி பில்டர்ஸ் 0.002% குறைவு<br><br>2).தி/ள்.செவ்வேல் அன் கோ 0.03% அதிகம் | தி/ள்.எஸ்.பி பில்டர்ஸ் 0.002% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்.130/2020/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 300 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சி வடக்கு மண்டல வார்டுக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | நிர்வாக அனுமதி நாள் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1. | வார்டு எண் 47 க்குட்பட்ட கட்டபொம்மன் வீதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் புதுப்பித்தல்.<br>ந.க.எண்.11706/2019/எம்.டி.2 | 30.00 | ம.தீஎண் 64 நாள். 06.01.20 | 10.03.20 முதலாம் அழைப்பு | 1).தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.06% குறைவு<br>2).திரு.ஆர்.வி.பி. பாலமுருகன் 0.12% அதிகம் | தி/ள்.எஸ்.எஸ். இன்ஜினீயர்ஸ் 0.06% குறைவு |
| 2. | வார்டு எண் 40 க்குட்பட்ட அம்பாள் நகர் பிரதான சாலை, ஸ்ரீராம் நகர், சோபா நகர், வரதராஜ௳லு நகர், பட்டாளம்மன் கோவில் வீதி, வி.ஜி.ராவ் நகர், முருகன் நகர், பாலாஜி நகர், பி.பி.சி காலனி, இ,பி காலனி, சுபாஷ் நகர், காமதேனு நகர் மற்றும் ஆவாரம்பாளையம் பகுதிகள் மற்றும் திருவீசாத் நகர் ஆகிய பகுதிகளில் ஏற்கனவே உள்ள மழைநீர் வடிகால் தூர்வாருதல் மற்றும் பழுதடைந்த பகுதிகளில் மழைநீர் வடிகால் புதுப்பித்தல்.<br>ந.க.எண்.136/2020/எம்.டி.2 | 32.00 | ம.தீஎண் 65 நாள். 06.01.20 | 10.03.20 முதலாம் அழைப்பு | 1).திள்.சௌபர்ணிகா அசோசியேட்ஸ் 0.41% குறைவு<br><br>2).தி/ள்.செவ்வேல் அன் கோ 3.38% அதிகம்<br><br>3).தி/ள்.பிருந்தாவன் ஏஜென்சி 0.24% அதிகம்<br><br>4).திரு.எம்.ராம்ராஜ் 2.58% குறைவு | திரு.எம்.ராம்ராஜ் 2.58% குறைவு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3. | வார்டு எண் 43க்குட்பட்ட உருமாண்டம்பாளையம் மற்றும் வி.சி.எஸ் நகர் பகுதிகளில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணி ந.க.எண்.10904/2019/எம்.டி.2 | 11.00 | ம.தீஎண் 351 நாள். 22.11.19 | 10.03.20 இரண்டாம் அழைப்பு | 1).திரு.கே.சுந்தரம் **0.98 % குறைவு**<br><br>2).திரு.எஸ்.சிவராஜ் 2.92% குறைவு | திரு.எஸ்.சிவராஜ் 2.92% குறைவு |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு பெறப்பட்ட ஒப்பந்த புள்ளிகளை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:-அனுமதிக்கலாம் ந.க.எண்.11706/2019/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 301 நாள் 19.06.2020**

அனுமதிக்கப்பட்டது.

---

(ஒப்பம்) ஜெ.ஷ்ரவன்குமார், இ.ஆ.ப.,
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி